**Starting time 12.11P.M.**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 66/2008**

Deposition of P**.W. –1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Thiru. Periyasami, Gr. III Bench Clerk of this court, on 22-01-2021 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : ராணி | Husband Name | : மலையன் |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**: நான் பாப்பநாயக்கன்பட்டி மாரியம்மன் கோவில் தெருவில் குடியிருக்கிறேன். எனது கணவர் பிரதிவாதிக்கு பதிவு செய்ய்யப்பட்ட கிரய ஒப்பந்த பத்திரம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்து அதன் அடிப்படையில் பிரதிவாதி தாவா தாக்கல் செய்து அவருக்கு ஆதரவாக தீர்ப்பாகி நீதிமன்றத்தால் கிரயம் செய்து கொடுக்கப்பபட்டு தற்போது சுவாதீனம் எடுப்பதற்காக REP 65/99 என்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். ஆனால் நான் மேற்படி சொத்து என்னுடையது என்றும் பிரதிவாதிகள் தாவா சொத்தில் நுழையக்கூடாது என்றும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் எனது கணவர் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரய ஒப்பந்த பத்திரம் செல்லாது என்றும் மேற்படி சொத்து குறித்து பிரதிவாதி பெற்ற தீர்ப்பு செல்லாது என்றும் நான் பரிகாகரம் கோரவில்லை. தாவா சொத்து என் அப்பா மூலம் எனக்கு கிடைக்கப்பெற்ற

சொத்தாகும். எனது அப்பா எனக்கு என்ன ஆவணம் மூலம் தாவா சொத்தை எனக்கு கொடுத்தார் என்றால் ஆவணம் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை. எனது கணவர் மலையன் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார். நானும் எனது கணவரும் ஒன்றாகத்தான் உள்ளோம். மேற்படி தாவா சொத்து என் அப்பா பெயரில் இருந்ததற்கான ஆவணம் எதுவும் தாக்ககல் செய்துள்ளேனா என்றால் என் அப்பா பெயரில் இருந்நததற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. ஆனால் என் பெயரில் இருப்பதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ–1 ஆன 28.08.1991 தேதியிட்ட பட்டா மூலம்தான் தாவா எனக்கு பாத்தியப்பட்டது. மேற்படி வா.சா.1 ஆவணத்திற்கு முன்பு தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு வேறு ஆவணம் எதுவும் இல்லை. எனது கணவர் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரய ஒப்பந்த பத்திரம் 21.05.1990 ன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி கிரய ஒப்பந்த பத்திரத்தின் அடிப்படையில்தான் பிரதிவாதி தாவா தாக்கல் செய்து அது அவருக்கு ஆதரவாக தீர்ப்பாகி உள்ளது. மேற்படி கிரய ஒப்பந்த பத்திரத்தில் எனது கணவர் அதில் வில்லை வீடு இருப்பதாக எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி REP 65/1999 ற்கான அசல் வழக்கு எண் 209/1994 நான் தரப்பினராக சேர்க்க செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்படி வழக்கில் என்னை தரப்பினராக சேர்க்க மனு செய்யும்போது அந்த வழக்கை பற்றிய விவரம் எனக்கு தெரியும். நான் இந்த தாவாவில் எனது அப்பா எந்த தேதியில் எந்த வருடம் வழக்கு சொத்தை என்னிடம் ஒப்படைத்தார் என்ற விவரம் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய கணவர் மலையனின் அப்பா பெயர் சடையன் ஆகும். மேற்படி இந்த வழக்கு சொத்து சடையன் மகன் மலையன் என்ற எனது கணவரின் பெயரில் இருந்தது என்றும் மேற்படி எனது கணவர் பிரதிவாதிக்கு 1990 ஆம் ஆண்டு கிரய ஒப்பந்த பத்திரம் எழுதிக்கொடுத்த பின்பு என் பெயரில் பொய்யாக பட்டா வாங்கியுள்ளளேன் என்று சொன்னால் சரியல்ல. என் கணவருக்கு

எதிராக தாக்கல் செய்யப்பட்ட 209/1994 வழக்கிற்கு பின்னிட்டு 14 வருடங்கள் கழித்து மேற்படி வழக்கில் சுவாதீனம் எடுப்பதை தடுப்பதற்காக நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி கிரய ஒப்பந்தம் ஏற்பட்ட தேதியன்று இந்த தாவா சொத்து என் பெயரில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் இந்த தாவா சொத்தில் கூரை வீடு இருந்ததாக சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு பட்டா வழங்கப்பட்ட பிறகு நான் தாவா சொத்தில் வில்லை வீடு கட்டியதாக எனது வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் வில்லை வீடு கட்டு 37 வருடங்கள் ஆகிறது. நான் மேற்படி வில்லை வீட்டை நான்தான் கட்டியதாக தாவாவில் கூறுவது தவறு என்று சொன்னால் சரியல்ல. மேற்படி தாவா சொத்தில் எனது கணவர் மலையன்தான் வில்லைவீடு கட்டி அனுபவம் செய்துவந்தார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கான வீட்டு மின் இணைப்பு என் பெயரில் இல்லை. என் அண்ணன் பெயரில் உள்ளது. வீட்டு வரி ரசீது, அடி நிலத்திற்கான பட்டா ஆகியவை என் பெயரில் உள்ளது. தாவா சொத்தில் என் அண்ணன் பெயரில் மின் இணைப்பு உள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல. என் வீட்டிற்கு அருகில்தான் என் அண்ணன் மற்றும் அப்பாவின் வீடு உள்ளது. நான் இந்த தாவாவில் தாக்கல் செய்துள்ள மின் இணைப்பு ரசீது, வீட்டு வரி ரசீது என் அண்ணன் வெள்ளையன் பெயரில் உள்ளதை தாவா சொத்திற்கு சம்மந்தப்பட்டது என்று தாக்கல் செய்துள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல. பாப்பநாயக்கன்பட்டியில் இருந்த முன்னால் எம்எல்ஏ பெருமாள் எனக்கு உறவினர் அவருடைய மனைவியும் எம்எல்ஏ –வாக இருந்தார். மேற்படி கிரய ஒப்பந்த காலத்தில் பெருமாள் என்பவர் எம்எல்ஏ வாக இருந்தார் என்றால் சரிதான். மேற்படி பெருமாள் என்பவரின் செல்வாக்கை பயன்படுத்தி கிரய ஒப்பந்தத்திற்கு பின்னிட்டு பிரதிவாதியை ஏமாற்றும் நோக்கத்தில் தாவா சொத்திற்கான பட்டா என் பெயரில் பெறப்பட்டது என்றால் சரியல்ல. என்

கணவர் என்ன படித்துள்ளார் என்று எனக்கு தெரியாது. தேக்கம்பட்டு கிராமத்திலிருந்த வங்கியில் வேலையில் இருந்தார். எனது கணவர் எத்தனை வருடமாக மேற்படி வங்கியில் வேலை இருந்தார் என்பது எனக்கு தெரியாது. என் கணவர் மேற்படி வங்கியில் பணியில் இருக்கும்போது அந்த வங்கியில் கையாடல் செய்துவிட்டதாக அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கிற்காக எனது கணவர் நீதிமன்றத்திற்கு வந்து கொண்டிருந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எனக்கு பாத்தியப்பட்ட சொத்தை எவ்வாறு பிரதிவாதிக்கு எழுதிக் கொடுக்கலாம் என்று என் கணவர் பெயரில் நான் நடிவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் எடுக்கவில்லை. மேற்படி பிரதிவாதி நீதிமன்றத்தின் மூலம் தனது சுவாதீனம் வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். எங்கள் குடும்பத்திற்கு தாவா வீடு ஒன்று மட்டும்தான் உள்ளது. மேற்படி கிரய ஒப்பந்த பத்திரத்தில் சொல்லியுள்ள வீடும் தாவா வீடும் ஒன்றுதான். ராமசாமி மகன் சுந்தரம் நிலம் தாவா வீட்டிற்கும் மேற்கில் உள்ளது. எனது வீட்டிற்கும் மாரியம்மன் கோவிலுக்கும் இடையே காலி நிலம் உள்ளதா என்றால் உள்ளது மேற்படி நிலம் கோவில் நிலமாகும். எனது வீட்டிற்கு வடக்கே பொன்னுசாமி மனைவி பாக்கியம் வீடு உள்ளது. எனது வீட்டிற்கு கிழக்கே தென்வடல் வீதி உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள வீட்டு வரி ரசீதுகள் பாப்பநாயக்கன்பட்டியில் உள்ள காந்திநகரில் உள்ள என்னுடைய இன்னொரு வீட்டிற்கான ரசீதுகள் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து குறித்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி எதிர் வழக்குரையில் தாவா சொத்து என்னுடையது இல்லை என்று எனது உரிமை மூலத்தை மறுத்தும் நான் தாவாவை விளம்புகை பரிகாரத்திற்காக திருத்தம் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதி தாவா சொத்தை நீதி மன்றத்தின் மூலம் சுவாதீனம் எடுப்பதை தடுப்பதற்காக நான் இந்த தாவாவை

தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பிரதிவாதியை சுவாதீனத்தை தடுப்பதற்காக வழக்கிற்கு சம்மந்தமில்லாத ஆவணங்களையும் தாக்கல் செய்து தாவா சொத்து என்னுடையது என்றும் உரிமை கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் என்னுடைய தாவாவில் சொல்லியுள்ளவாறு பிரதிவாதி 18.02.2008 அன்று அவரது ஆட்களுடன் தாவா சொத்தில் அத்துமீறி நுழைய முயற்சிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி நீதிமன்றத்தின் மூலம் சுவாதீனம் எடுக்க நடவடிக்கை எடுத்திருக்கையில் தாவா சொத்தில் அத்துமீறி நுழைய வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா வழக்கு மூலம் கற்பனையானது என்று சொன்னால் சரியல்ல. நான் தாவாவில் தாக்கல் செய்துள்ள எந்த ஆவணமும் தாவா சொத்தில் எனக்கு உரிமையையோ அனுபவத்தையோ ஏற்படுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியின் அனுபவத்தை தடுப்பதற்காக சட்ட விரோதமாக இந்த தாவாவை நான் தாக்கல் செய்துள்ளதால் அதிகப்படியான செலவுத் தொகையுடன் தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Ending Time : 01.02P.M.

**ஒப்பம்/– அ.நர்மதாராணி**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**ஆத்தூர்.**